S.C.323/2017

**P.W.19 திரு.மணிகண்டன் 29.11.2021**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிடியாணை வேண்டா குற்ற வழக்குகளிலும் பிடியாணை வேண்டும் குற்ற வழக்குகளிலும் எவ்வாறு புலன் விசாரணை செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியும். கொலை குற்றம் போன்ற கொடுங்குற்றங்களை செய்திருப்பது தெரியவந்தால் குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கின் அசா1 பால் டேனியல் புகார் கொடுக்கும் போது 2ம் எதிரி காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் அசா1 காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார். அசாஆ1,2 குறித்து அசா1 னிடம் விசாரித்தேன். நான் அவ்வாறு அசா1 யிடம் விசாரித்த போது காவல் நிலையத்தில் 2வது எதிரி இருந்தார். சம்பவ சமயத்தில் எங்களது காவல் நிலையம் ஆனையூரில் TNHB வளாகத்தில் இருந்தது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் கூடல் புதூரில் உள்ள TNHB க்கு சொந்தமான ஏரியாவில் இருந்தது. எங்கள் காவல் நிலையத்தில் இருந்து கூடல் புதூர் மேற்கு திசையில் 1.5 கிமீ தூரத்தில் உள்ளது. சம்பவ சமயத்தில் எங்கள் காவல் நிலையத்திற்கு பின்புறம் தான் 1ம் எதிரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். அசா1 என்னிடம் அசாஆ1,2 கொடுத்த போது 2ம் எதிரியிடம் அசாஆ1 ஆன ஆவணம் குறித்து கேட்டேனா என்றால் தனியாக கேட்டேன். அசா1 னிடம் அசாஆ1,2 குறித்து விசாரித்து தெரிந்து கொண்ட பின்பு தான் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நான் பதிவு செய்தேன். அசாஆ2 காவல் நிலையத்தில் வைத்து எழுதப்படவில்லை. அசா1 தன்னுடன் கொண்டு வந்திருந்தார். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது computer operate செய்யும் காவலர் பதிவு செய்தார். அவருடைய பெயர் தற்போது ஞாபகமில்லை. அவரை இவ்வழக்கில் சாட்சியாகவும் விசாரிக்கவில்லை. புகாரை பெற்று அதனை விசாரித்து கணினியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு சுமார் அரை மணி நேரம் ஆகும். இவ்வழக்கின் சம்பவ இடம் குறித்து நான் யாரையும் விசாரித்தேனா என்றால் நாங்கள் ரவுண்ட்ஸ்க்கு செல்லும் போது அனைத்து இடங்களும் தெரியும் என்பதால் எனக்கு தெரியும். நான் சம்பவம் இடம் சென்ற போது இடம் பூட்டு போடப்படாமல் சாத்தப்பட்டிருந்தது. நான் சம்பவம் இடம் சென்ற போது சம்பவ வீட்டில் யாரும் இல்லை. நான் சம்பவம் இடம் சென்ற போது சம்பவ வீட்டில் யார் யார் குடியிருந்தார்கள் அவர்கள் எங்கே போனார்கள் என்பது குறித்து விசாரித்தேன். அவ்வாறு விசாரித்த போது சம்பவ

வீட்டில் 2ம் எதிரியின் தாயார் விஜயா என்பவர் குடியிருந்து வந்தது தெரியவந்தது. விஜயா என்பவருடன் அவரது இளைய மகன் வழக்கின் சாட்சி சதீஷ்கண்ணனும் குடியிருந்து வந்தார். நான் சம்பவம் இடம் சென்ற போது சம்பவ வீட்டில் விஜயா, சதீஷ்கண்ணனை பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக விஜயா என்பவரை விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பொதுவாக குற்ற வழக்கில் ஒருவரை விசாரணை செய்யும் போது வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக விஜயா என்பவரை எப்போது எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் அவரை விசாரித்த விவரங்கள் குறித்து என்னுடைய வழக்கு கோப்பில் குறிப்பிடப்படவில்லை. விஜயா, அசா6 சதீஷ்கண்ணன் ஆகியோரிடன் வீட்டின் பூட்டு சாவி எங்கே என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் சென்ற சமயம் வீட்டின் கதவு பூட்டு இல்லாமல் சாத்தப்பட்டிருந்த நிலையில் விஜயா, அசா6 சதீஷ்கண்ணன் ஆகியோரிடன் வீட்டின் பூட்டு சாவி எங்கே என்றும் அந்த கதவை யார் திறந்து சாத்தியிருந்தனர் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. சம்பவ சமயத்தில் நான் சதீஷ்கண்ணன் என்பவரை அன்றைய தினம் விசாரணை செய்யவில்லை. சதீஷ்கண்ணன் என்பவரை 04.03.2017 தேதியன்று விசாரணை செய்தேன். என்னுடைய விசாரணையில் சதீஷ்கண்ணன் மதுரையில் வேலை பார்த்த விவரம் தெரியவந்தது. 28.02.2017 தேதி முதல் 04.03.2017 தேதி வரை அசா6 சதீஷ்கண்ணன் வீட்டிற்கு வராமல் எங்கு யாருடன் இருந்தார் என்பது குறித்து நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. இவ்வழக்கில் விஜயா, சதீஷ்கண்ணன் ஆகியோரை சம்பவ தினத்தன்றே விசாரணை செய்தேன் என்றும் அந்த வாக்குமூலங்கள் அவர்களுக்கு எதிராகவும் இவ்வழக்கிற்கு எதிராகவும் இருந்ததால் மறைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் 2ம் எதிரி சம்பவ காலத்தில் காதலித்து திருமணம் செய்து கொண்டு ஜெய்ஹிந்த்புரத்தில் குடியிருந்து வந்தார் என்ற விவரம் தெரியவந்தது. வழக்கு சம்பந்தமாக 2ம் எதிரியின் மனைவியையோ ஜெய்ஹிந்த்புரம் பகுதியினரையோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. ஆனால் அவர் மனைவியை பிரிந்து அவரது அம்மாவுடன் வசித்து வருகிறார். அவ்வாறு அவர் மனைவியை பிரிந்து அவரது அம்மாவுடன் வசித்து வருகிறார் என்பது குறித்து எந்த

சாட்சி கூறியுள்ளார் என்றால் சதீஷ்கண்ணன் சாட்சி அளித்துள்ளார். அசா6 தவிர 2ம் எதிரியின் மனைவியையோ உறவினர்களையோ விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரி சம்பவ காலத்தில் காதலித்து திருமணம் செய்து கொண்டு ஜெய்ஹிந்த்புரத்தில் குடியிருந்து வந்தார் என்ற விவரம் தெரிந்து வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 புகார் கொடுத்தவுடன் 1ம் எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு வர உடனடியாக நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. புகாரை பெற்ற பிறகு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்ட பிறகு நடவடிக்கை எடுத்தேன். பார்வை மகசர் தயார் செய்த அன்றே 1ம் எதிரியை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேன். 1 ம் எதிரியை கைது செய்ய வேண்டும் என்றால் பெண் காவலர் உடன் இருக்க வேண்டும் என்றால் சரிதான். 28.02.2017 தேதியன்று 1ம் எதிரியை கைது செய்வதற்கு பெண் போலிசாரை அனுப்பவில்லை. 01.03.2017 தேதியன்று காலை பெண் காவலர் சுமதி என்பவரை 1ம் எதிரியின் வீட்டில் உள்ளாரா என்பதை பார்வையிட அனுப்பி வைத்தேன். 01.03.2017 தேதி பெண் காவலர் சுமதி என்பவரை 1ம் எதிரியின் வீட்டில் உள்ளாரா என்பதை பார்வையிட அனுப்பி வைத்தது குறித்து விசாரித்து வாக்குமூலம் எதிவு செய்தேனா என்றால் இல்லை. கைது செய்வது என்றால் எனக்கு தெரியும். ஒருவரது சட்ட உரிமையை தடுத்து நிறுத்தினால் கைது என்று வரும் என்றால் சரிதான். 28.02.2017 தேதி இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர் 2ம் எதிரி ராஜேஷை பாரா வசம் உள்ள போலிசாரிடம் ஒப்படைத்து திரேக பரிசோதனை செய்ய கோரினேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு உடனடியாக 2ம் எதிரியை சம்பவ இடத்திற்கு அழைத்து செல்லவில்லை. ஒரு நபரை கைது செய்ய வேண்டும் என்றால் அவரது உறவினர்களுக்கு முறைப்படி தகவல் தெரிவித்து அவர்கள் கையொப்பம் பெற வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் 2ம் எதிரியின் கைது குறித்து உறவினர்களிடம் தகவல் தெரிவிக்கப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது. இவ்வழக்கில் 2ம் எதிரியின் கைது குறித்து அசா6 ஆன சதீஷ்கண்ணனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். 01.03.2017 தேதியன்று சதீஷ்கண்ணன் என்பவரை விசாரிக்கவில்லை. அதற்கான தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. விஜயா,

சதீஷ்கண்ணன் ஆகியோர் சம்பவ தினத்தன்றே காவல் நிலையத்தில் சட்டத்திற்கு புறம்பாக வைக்கப்பட்டிருந்தனர் என்றும் பின்னர் நிர்பந்தத்தின் பேரில் இருவரும் விடுவிக்கப்பட்டு 2ம் எதிரி மீது பின்னிட்டு ஆவணங்கள் பொய்யாக புனையப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிரியை கூடல் புதூர் என்ற இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்ட நேரம் 28.02.2017 தேதி இரவு 11.30 மணியளவில் கைது செய்யப்பட்டதாக கைது குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் 2ம் எதிரியை கைது செய்யவில்லை என்றும் 2ம் எதிரி அசா1 ன்னிடம் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் வழக்கு ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு மேற்படி வழக்கு ஆவண்ங்கள் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நான் விசாரித்த போது இறந்தவரின் உறவினர்கள் யாரும் மதுரையில் இல்லை என்ற விவரம் தெரியவந்தது என்றால் சரிதான். இறந்த நபரின் உறவினர்களுக்கு யார் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது என்ற விவரத்தை எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியவில்லை. அசா2 பேரையூரை சேர்ந்தவர். அசா2க்கு இவ்வழக்கின் சம்பவம் எப்படி தெரியும் என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. சாட்சி பட்டியலில் 3வதாக உள்ள செல்வக்குமார் பெங்களுரை சேர்ந்தவர் எப்படி யார் சொல்லி வந்தார் என்ற விவரத்தை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பெங்களுரில் இருந்து மதுரைக்கு வர சுமார் 8 மணி நேரம் ஆகும் என்றால் சுமார் 6 மணி நேரத்தில் கூட வாய்ப்பிருக்கும். செல்வக்குமார் பெங்களுரில் இருந்து எந்த வாகனத்தில் இருந்து வந்தார் என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக சம்பவ இடத்தில் என்னென்ன பொருட்கள் காணப்பட்டதோ அவை அப்படியே புகைப்படமாக எடுக்க வேண்டும் என்றால் சரிதான். பார்வை மகசரில் என்னென்ன பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோ அவை குறித்து புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக எடுக்கப்பட்ட புகைப்படத்தில் இரும்பு கட்டிலின் மேல் டொரினா பாட்டில், பிளாஸ்டிக் சேர்–2 இருந்ததாகவோ காணப்படவில்லை என்றால் சரியல்ல. புகைப்படத்தில் கட்டிலை focus செய்து புகைப்படம் எடுக்கவில்லை.

இவ்வழக்கில் ஹாலில் குற்ற சம்பவம் நடந்து பாத்ரூமில் இறந்தவரின் உடல் இழுத்து சென்று போட்டதாக தெரியவந்தது என்றால் சரிதான். இவ்வழக்கில் ஹாலில் ரத்தக்கறை இருந்ததாகவோ அதை இழுத்து சென்றதற்கான அடையாளங்கள் இருந்ததாகவோ ரத்த கறை படிந்த சிமிண்ட் தரையை தோண்டி எடுத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பாத்ரூமில் உள்ள சிமிண்ட் தரையை பெயர்த்து எடுத்து அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளோம்.

(போதிய நேரமின்மை காரணமாக எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )